# ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தாவின் சிறு கதைகள்

# Swami Jyothirmayananda's short stories

**1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, 1953 ஆம் ஆண்டில் சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் கீழே உள்ள கதையும். அவர் கொடுத்துள்ள அனுமதியும் கீழே உள்ளது.**

**Swami Jyotirmayananda was born in the year 1931 in Bihar to a noble and orthodox family and took to Sanya Diksha in the year 1953. He founded a Yoga research center and ashram in Miami, USA in the year 1969 and has been teaching the art of Yoga and its practices. Besides he has also authored several books. The short stories written by him are thought provoking. This bilingual story is one in them. The permission given by him is also reproduced below.**

**Swamiji** <swamiji@bellsouth.net>
To: nrj_1945@yahoo.com

Sun, 16 Jul, 2006 at 3:53 pm

N. R. Jayaraman

Blessed Self,
Adorations!

Your article was forwarded to me by Dr. Shashi B. Mishra.
I am pleased to see it.

You have my permission to publish translated versions (in Tamil))
of any article from my publications.

Dissemination of spiritual knowledge is the greatest
act of Divine Worship.

May God bless you with Success!

With regards Prem and Om,
Yours in the Lord
Swami Jyotirmayananda

# பகவான் அனுமாரின் உண்மையான சக்திகள்

## சாந்திப்பிரியா



இராமாயணத்தில் பகவான் ஆஞ்சனேயர் முக்கிய கதாபாத்திரம். பகவான் இராமனுக்கு அடுத்து பலமிக்கவர் அவர் என்பதே உண்மை. அளவற்ற பக்தியும், தாம் எடுத்துக் கொண்ட கடமையை நிறைவேற்றுதலிலும், பகவான் இராம பக்தியிலும் மிகச் சிறந்து விளங்கிய அவரே பகவான் இராமரை புரிந்து கொள்ள நாம் செல்லும் வழியின் முதல் நுழை வாயில். அவரை புரிந்து கொள்ளாவிடில் நம்மால் பகவான் இராமரையும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது. பக்தி மார்க கூற்றின்படி கடவுளைவிட ஒரு விழிப்புணர்ச்சி பெற்ற பக்தனே முதன்மையானவர். ஏன்

எனில் கடவுளை சென்றடைய அவரே நமக்கு குரு போல வழிகாட்டியாக இருப்பவர்.

பகவான் ஆஞ்சனேயரிடம் இருந்தது சாதனா சக்தி. அதாவது தான் மேற் கொண்டிருந்த ஆன்மீக ஒழுக்க முறை. சாதனா சக்தியில் இருவகை உண்டு. தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட சுய ஒழுக்கம் - அதை புருஷார்த்தா என்பர். (புருஷன் என்றால் மனிதப் பிறவி, அர்த்த என்றால் முடிவான லட்சியம் என்பது பொருள். ஆகவேதான் புருஷாத்மம் என்றால் ஒரு மனிதனுக்கு தேவை முறையான லட்சியம் என்பார்கள் - சாந்திப்பிரியா) . இன்னொன்று கடவுள் தந்த வரம். இரண்டும் அவரிடம் இருந்ததினால்தான் அவரால் எதையும் சாதிக்க முடிந்தது. சீதா தேவியை தேடிக் கொண்டு பகவான் அனுமான் கடலைத் தாண்டிப் பறந்து சென்ற பொழுது, கடலுக்குள் மறைந்திருந்த மைனகா மலையிடம் கடல் கூறியது 'கடலைத் தாண்டிச் தொடர்ந்து சென்று கொண்டு இருக்கும் பகவான் இராமனின் தூதுவருக்கு சற்று ஓய்வெடுக்க நீ உதவ வேண்டும். அப்பொழுதுதான் தான் பயணிக்கும் பொழுது இழக்கும் சக்தியை அவர் மீண்டும் உயிர்பித்துக் கொள்ள முடியும்'. அதைக் கேட்ட மைனகா மலை மிகவும் மகிழ்வுற்று, பகவான் அனுமானுக்கு உதவ நினைத்து தன்னுடைய சக்தியினால் அற்புதமான இயற்கை அழகுகள் கொண்ட மாபெரும் வனப் பிரதேசத்தை தன் மீது எழுப்பி பயணம் செய்து கொண்டு இருந்த பகவான் அனுமானைக் கூவி அழைத்து ' பெரும் குரங்கே, என்னை கடல் அரசன் உனக்கு உதவுமாறு அனுப்பி உள்ளார். தொடர்ந்து பயணிக்கும் நீ என் மீது சற்று ஓய்வெடுத்துக் கொண்டு பயணத்தைத் தொடரலாம் அல்லவா ' என்றது. அதைக் கேட்ட பகவான் அனுமார் கூறினார் 'சகோதரா, உன் அழைப்பிற்கு நன்றி. பகவான் இராமர் கொடுத்துள்ள கட்டளையை நிறைவேற்றி முடிக்கும்வரை எனக்கு ஓய்வெடுக்க நேரம் கிடையாது. ஆகவே என்னை ஓய்வெடுக்கும்படி கட்டாயப்படுத்தாதே ' இப்படியாகக் கூறிவிட்டு பகவான் அனுமார் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் என்ன போதிக்கப்பட்டது எனில் எவர் ஒருவர் தனக்கு அபரிதமான ஆத்ம பலம் உள்ளது என்பதை முழுமையாக உணர்ந்து கொள்வார்களோ அப்பொழுது கிடைக்கும் மன இன்பத்தில் ஆன்மீக பலம் இன்னமும் அதிகரித்து, இதற்கும் மேல் ஒன்றும் தேவை இல்லை என்பதை புரிந்து கொள்வார்கள். அதாவது பல காத தூரம் ஒரு புதையலைத் தேடிப் போனவன் அங்கு சென்று புதையலைக் கண்டதும் அடையும் சில நேர இன்பத்தை விட அந்தப் புதையல் மீதே வாழ்ந்து கொண்டு இருப்பவன், அதை தோண்டிப் பார்க்கக் கூட ஆசையின்றி மன இன்பத்துடன் வாழும் மனநிலையில் இருந்து விடுவான். புதையல் மீதே தான் அமர்ந்து இருக்கையில் புதையலைத் தேடி ஏன் போக வேண்டும் என எண்ணி விடுவான். ஆகவே என்ன இடையூறு ஏற்பட்டாலும், தற்காலிக இன்பம் கிடைத்தாலும் அதை ஏற்காமல் தான் மேற் கொண்ட கடமையை தொடர்ந்து கொண்டு இருக்க வேண்டும் என்பதையே பகவான் அனுமானின் இந்த நிலை எடுத்துக் காட்டுகின்றது.

அப்போது பாம்புக்களின் தலைவியான சுராசுரா என்ற நாகம் தன்னுடைய வாயை பெரியதாக திறந்து வைத்துக் கொண்டு பகவான் அனுமானின் பாதையை வழி மறித்தபடிக் கூறியது 'குழந்தாய், வானில் ஒரு அற்புதமான உணவு பறந்து கொண்டு வருகின்றது என என்னிடம் பலர் கூறினர். உன்னைப் பார்த்தால் அது நீயே எனத் தோன்றுகின்றது. ஆகவே என் வாயில் புகுந்து கொண்டு எனக்கு உணவாகுவாயா?' அதைக் கேட்ட பகவான் அனுமான் பயப்படவில்லை. மாறாக அவர் கூறினார் 'அன்னையே நான் முதலில் பகவான் இராமபிரானின் கட்டளைகது ஏற்ப சீதா தேவி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து அவரிடம் சேதியை தெரிவித்தப் பின் திரும்பி வருகின்றேன். அப்பொழுது நீ என்னை உன் விருப்பப்படி உணவாக்கிக் கொள்ளலாம் ' ஆனால் சுராசுரா விடவில்லை. வழியை மறைத்தபடி அவர் பாதையை தடுத்தது. ஒரு கணம் யோசித்த பகவான் அனுமார் கூறினார் ' சரி முடிந்தால் என்னை பிடித்துத் தின்று கொள் ' உடனே அந்த பாம்பு தன் வாயை எட்டு மைல் பரப்பளவுக்கு பெரிதாக்கிக் கொண்டு பகவான் அனுமனை நோக்கி

வந்த பொழுது,  பகவான் அனுமான் தன்னை பதினாறு மைல் அளவில் பெரிதாக்கிக் கொண்டார். ஓவ்ஒரு முறையும் பாம்பின் அளவை விட பகவான் அனுமான் தன்னை இரு மடங்காக்கிக் கொண்டார். இப்படியாக பாம்பு மாற்றி பகவான் அனுமான், பகவான் அனுமான் மாற்றிப் பாம்பு என இருவரும் தம் உருவை பெரிதாக்கிக் கொண்டு நாடகமாட திடீரென பகவான் அனுமான் தன் உருவை மிகச் சிறியதாக்கிக் கொண்டு அந்த பாம்பின் நாக்கில் அமர்ந்து கொண்டு 'இனி என்னை சாப்பிடு' எனக் கூறினார். பாம்பும் அவசரம் அவசரமாக தன் வாயை சிறிதாக்கிக் கொண்டு அவரை முழுங்க நினைத்த பொழுது அதன் வாயில் இருந்து வெளியே குதித்தார் அனுமார். தன்னை ஏமாற்றி விட்ட பகவான் அனுமானின் புத்தி சாதுர்யத்தைக் கண்ட பாம்பின் தலைவி கூறினாள் 'ஓ... பக்த அனுமானே  உண்மையில் நான் உன்னை சாப்பிட வரவில்லை. உன் சக்தியை சோதிக்கவே வந்தேன். நீ பெரும் சக்தி வாய்ந்தவன், புத்தி கூர்மை உள்ளவன் எனக் காட்டி விட்டாய். உன்னுடைய புத்தி சாதுர்யத்தினால் கண்டிப்பாக நீ பகவான்  இராமனின் கட்டளையை நிறைவேற்றுவாய். சீதா தேவியை  கண்டு பிடிப்பாய் ' என்று கூறி விட்டுச் சென்றாள்.

இது நமக்குக் கொடுக்கும் செய்தி என்ன ? வளைந்து வளைந்து செல்லும் பாம்பு போன்றது நம் மனம். மனது மாறி மாறி பல ரூபங்களில் நம்மை ஆட்கொள்ளும் பொழுது நமக்கு கோபமும், பீதியும் தோன்றுகின்றன. எந்த ஒரு நிலைமையையும் சந்திக்கும் மனப் பக்குவம் பெற வேண்டும். எந்த நிலையையும் நாம் புத்தி சாதுர்யமாகவே சந்திக்க வேண்டும். ஆன்மீக பலமும், ஆத்ம பலமும் உள்ளவர் எதையும்  தைரியமாக எதிர் கொள்ளும் அளவுக்கு ஆத்ம பலத்தையும் ஆன்மீக பலத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை பாம்பின் வாய் பெரியதாகியபோது  பகவான் அனுமானும் தன் உருவை பெரியதாக்கிக் கொண்ட நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது. இரண்டாம் கட்டமாக இறைவனிடம் சரணாகதி அடைந்தது விடுவது போல பரந்து விரிந்த உலகில் ஒரு இடத்தில் சென்று அமைதியாக அமர்ந்தது போல பாம்பின் வாய்க்குள் சென்று அவர் அமர்ந்ததும், அந்த பரந்த உலகில் பற்று

கொண்டு ஒட்டிக் கொண்டு விடாமல் மீண்டும் ஆன்மீகப் பயணத்தைத் தொடர அவர் பாம்பின் வாயில் இருந்து வெளியேறிய செய்கை ஒரு பாடமாக தரப்பட்டுள்ளது. தன்னுடன் பற்று கொண்டு ஒட்டிக் கொள்ளாமல் பயணத்தைத் தொடர்ந்த வைராக்கியம் வாய்ந்தவரை அதே உலகம் பாராட்டுகின்றது என்பதை சுராசுராவின் பாராட்டு மூலம் அறிய முடியும் . ஆக எந்த ஒரு நிலையையும் சமாளிக்க ஒருவருக்கு ஆன்மீக, ஆத்ம பலம் மற்றும் கடவுளிடம் சரணாகதியும் முக்கியமான தேவைகள்.

# The inherent strength of Lord Anjaneya

## Santhipriya



Lord Anjaneya is the main protagonist in epic Ramayana, and is the most important character next to Lord Rama. If one has to understand the divinity

of Lord Rama and to beget his blessings, the gateway to enter into the fold of Lord Rama would be none other than Lord Anjaneya whose devotion and devotion to Lord Rama is beyond ones imagination. According to Bakthi Marg an enlightened devotee is more important than even the divine himself, who guides us like a true guru to reach the divine.

What Lord Anjaneya possessed was the power of Sadhana which is the other form of self imposed discipline in spirituality. The power of Sadhana has two branches- one self-imposed discipline called Purusharth and the second is the power bestowed by divine (Purusha means human and Artha means the ultimate aim or purpose . Therefore Purusharth meant 'purpose or ultimate aim of human beings'-Santhipriya) Since Lord Anjaneya possessed both the forms of power of Sadhana he was able to do any and everything beyond the imagination of others.

When Lord Anjaneya flew over the ocean to reach Lanka, the ocean requested mount Mainaka, hidden inside her (Ocean) to come out from the deep sea and help Lord Anjaneya, the true disciple of Lord Rama to rest for a while to recoup the lost energy as he was flying nonstop over the ocean. Overjoyed with the request, immediately mount Mainaka came out, and generated serene forest, filled with full of freshly grown green trees and plants and stopped Lord Anjaneya, requesting him to rest for a while in the lush green forest to recoup the energy lost in travel. Lord Anjaneya thanked the mount profusely but politely declined the offer expressing that his mission was his priority than rest

and therefore he would not like to take rest and waste even a minute. Saying so he continued his journey.

What is the philosophy behind it? As per Swami Jyotirmayananda, whoever possessed inherent discipline and self-imposed morality, they need no recouping of the energy as they neither lose energy nor physical strength and on the contrary they gain more and more strength with will power which is the self-generated power of Sadhana. A person who goes in search of treasure trove remain excited and happier only for some time, but the one who is already sitting over the treasure trove through the day and night would not derive such pleasure as he was already sitting over it. Therefore the state of mind of Lord Anjaneya was quite simpler- to succeed in the mission tasked to him, rest others including rest were irrelevant as self generated strength-devotion- backed him up.

On way further, Lord Anjaneya had to encounter another hurdle from a serpent called Surasura in the same ocean. The serpent kept her mouth wide open and blocked the way to tell Lord Anjaneya who was flying like a kid that someone had foretold her that a delicious food was coming through the skies and after seeing him (Lord Anjaneya) she surmised that he was the food stuff referred to her. She therefore requested the Lord whether he could enter into her mouth to be her food. Lord Anjaneya told her that since he was on mission to find out the whereabouts of Goddess Sita as commanded by Lord Rama, once he accomplished his mission and return back, then she could have him as her food. The serpent refused to accept his plea and attempted to swallow him by further

enlarging her mouth . Finding no way, Lord Anjaneya told her to eat him if she could and began to move. The serpent kept on enlarging her mouth to catch him, and every time she enlarged her mouth, Lord Anjaneya too enlarged himself and the game continued for some time when all of a sudden Lord Anjaneya shrunk his body to miniature level and sat on the tongue of the serpent asking her to eat him. While the serpent began to shorten her mouth, Lord Anjaneya suddenly jumped out and before she could realize what happened, he moved away swiftly from that place. Pleased with the act of Lord Anjaneya the serpent told him that she enacted a drama to test his will power and blessed him for success in his mission in tracing Goddess Sita.

The philosophy in this story is that our mind is like a snake which keep on changing the track overpowered by fear and anxiety as we move forward. Therefore one should remain clear in their thoughts and aim and practice the art of facing any and everything boldly and intelligently. The one who possesses both spiritual and moral power could face any situation in clever manner as illustrated by the snake attempting to catch the Lord by keeping on enlarging her mouth and the Lord blunted her attempt by mere intelligence and fearlessness. Secondly, voluntarily going and sitting inside the mouth of the serpent illustrate the state of unconditional surrender to the divine, an act of detachment from worldly life, and then escaping from the mouth of the serpent point out that despite detachment to the worldly affairs, one should not forget the responsibility and faith deposed on him.